தங்கமுருகன்
ஜுவல்லர்ஸ் A/c
267, மெயின்ரோடு, நகைக்கடை பஜார், சங்கரன்கோவில்
97893 91528 - 96299 64324


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
DIGITAL MARKETING
WEB DEVELOPMENT
SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 312 | 05.05.2026 | TUESDAY | CHITHIRAI: 22 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 312 | 05.05.2026 | செவ்வாய்கிழமை | சித்திரை : 22 | விலை : ரூ.5/-

## தமிழகத்தில் அமையும் 'மைனாரிட்டி' அரசும், மக்கள் தீர்ப்பும்

# "முதல்வர் ஆகிறார் விஜய்..."



## "திமுக இனி சிறப்பான எதிர்க்கட்சியாக செயல்படும்" : மு.க.ஸ்டாலின்

சென்னை: மே.5-

"இதுவரை மக்களுக்காகச் சிறப்பான ஆளும் கட்சியாகச் செயல்பட்ட திமுக இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும்" என்று தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக 73 இடங்களில் வெற்றியும், 31 இடங்களில் முன்னிலையும் பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. ஆளும் கட்சியான திமுக 40 இடங்களில் வெற்றியும், 19 இடங்களில் முன்னிலையும் பெற்றுள்ளது. இதனால் தமிழகத்தில் இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் ஸ்டாலின், 74,202 வாக்குகளை பெற்று தோல்வி அடைந்தார். அவரை எதிர்த்து தவெக சார்பில் போட்டியிட்ட வி.எஸ்.பாபு, 82,997 வாக்குகள் பெற்று 8,794 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார். அதில் அவர், "மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்கிறோம். வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏராளமான திட்டங்களை உருவாக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்கினோம். தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்தினோம்.

தேர்தல் களத்தில் எங்களது சாதனைகளைச் சொல்லியே வாக்குகளைக் கேட்டோம். மக்களுக்குச் செய்து கொடுத்த நலத்திட்டங்கள் தொடருவதற்கு வாக்கு கேட்டு நாங்கள் பரப்புரை செய்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன்.

அனைத்து மக்களுக்கும் உண்மையாக இருந்தேன். நான் எனது மனச்சாட்சிப்படியே செயல்பட்டேன். நான் எனது சக்தியை மீறி உழைத்தேன். என்னைப் போன்றே களத்தில் உழைத்த என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கருணாநிதியின் அன்பு உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

எங்களோடு தோளோடு தோள் நின்ற தோழமை இயக்கத் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி . எனது அரசியல் பொதுவாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன், தோல்விகளையும் சந்தித்துள்ளேன். எனவே இலட்சியமும் கொள்கையும்தான் முக்கியமே தவிர, வெற்றி தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக் கூடியவன் நான். அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும்.

இதுவரை மக்களுக்காகச் சிறப்பான ஆளும்கட்சியாகச் செயல்பட்ட திமுக, இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும்" என தெரிவித்துள்ளார்.

சென்னை, மே.5-

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு ஊடே வெளியான தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் தவெகவுக்கு சாதகமாக அமைந்துள்ளது. தனிப்பெரும்பான்மை பெறாவிட்டாலும் கூட தனித்துப் போட்டியிட்ட முதல் தேர்தலில் 105+ இடங்களை வசமாக்கியதே தவெகவுக்கு இமாலய சாதனைதான்.

ஆனாலும் ஆட்சியமைக்க 118 எம்எல்ஏக்கள் வேண்டுமென்ற நிலையில், அடுத்ததாக தவெக பக்குவமாகக் காய் நகர்த்த வேண்டிய மிகப்பெரிய சவால் எழுந்துள்ளது.

ஏற்கெனவே உண்மையான காங்கிரஸ் எங்கள் பக்கம் தான் என்று விஜய் சொன்னதால், திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் வெற்றி எம்எல்ஏக்களோடு அங்கே தாவுமா அல்லது அதிமுக கூட்டணியில் இருந்து பாமக நழுவுமா என்பதே இப்போதைய பேசுபொருள். அப்படியான கணக்கு வழக்குகள் எல்லாம் ஒர்க் அவுட் ஆன பின்னர், தவெக மைனாரிட்டி அரசாக ஆட்சியில் அமரக் கூடும். தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் முதல்வராகக் கூடும். இதுவரை யிலான முடிவுகள் அடிப்படை யிலான சாத்தியக் கூறுகள் இவையே.

தவெக ஆட்சிக்கு வந்த கதையை சற்றே துரிதமாக நாம் திரும்பிப் பார்ப்போம். பிப்ரவரி 2, 2024ல் தான் தவெக தொடங்கப்பட்டது. சரியாக 2 ஆண்டுகள் 3 மாதங்கள் நிறைவு செய்த கட்சிக்கு தமிழக மக்கள் பேராதரவை வழங்கி யிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் இது தவெகவின் எழுச்சியா இல்லை தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் சறுக்கலா என்பது ஆழமான விவாதப் பொருள்.

அதன் அடிப்படையில், தவெகவின் வெற்றிக்கான காரணங்கள் சிலவற்றை பட்டியலிட்டால், அதில் தமிழகத்துக்கும் திரைக் கவர்ச்சிக்குமான பந்தம் முதலிடம் பெறும். "திரை நட்சத்திர வழிபாட்டில் ஊறிப் போன தமிழகத்தை நன்கு புரிந்து வைத்திருந்தாலேயே திரைவாழ்வில் உச்சத்தில் இருந்த விஜய் கட்சி, அரசியல் என்ற பயணத்துக்கு முதலில் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அவருடைய நம்பிக்கை



சோரம் போகவில்லை." என்கின்றனர் தேர்ந்த அரசியல் நிபுணர்கள்.

அடுத்ததாக அரசியலில் பெரிதும் அனுபவம் இல்லாத விஜய்க்கு தோதாக, தோளாடு தோளாக நிற்க விசிகவில் இருந்து விலகிய எலக்‌ஷன் ஸ்ட்ராடஜிஸ்ட் ஆதவ் அர்ஜூனா வந்து சேர்ந்தார். அவர் செய்த கிரவுண்ட் ஒர்க், அவர் வகுத்துக் கொடுத்த ஸ்ட்ராடஜிகளையும் விஜய் ஒரு 'மாணவ ஒழுக்கத்தோடு' கடைப்பிடித்திருப்பார் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

திரைக் கவிர்ச்சி, எலக்‌ஷன் ஸ்ட்ராடஜிஸ்ட் துணையோடு விஜய்க்கு இன்னும் அதிகமாக பலன் கொடுத்தது அவர் கையிலெடுத்த எதிர்ப்பு அரசியல். தமிழகம் கடந்த 59 ஆண்டுகளாக திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, மாறி மாறி திராவிடக் கட்சிகளை அரியணை ஏற்றிய பூமி. அப்படியிருக்க ஆளும் திமுக எதிர்ப்பு அரசியலை விக்கிரவாண்டி தொடங்கி தனது கடைசி நாள் பிரச்சாரம் வரை ஆக்ரோஷமாக பழகினார் விஜய்.

ஆனாலும் அதிலொரு சூட்சமத்தை தன்வசம் வைத்துக் கொண்டார். அதன்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்தாலும் திராவிடக் கொள்கைகளை விமர்சிக்கவில்லை. தனது கொள்கைத் தலைவர்களில் பெரியாரையும் சேர்த்தே வைத்திருந்தார். திமுகவுக்கு எதிராக கூரான வாளைச் சுழற்றிக் கொண்டே 'அதிமுக பலவீனமாகிவிட்டது; அதற்கு தலைமை சரியில்லை' என்று மீண்டும் மீண்டும் மேடைகளில் சொல்லி அதிமுக வாக்குகளுக்கும் வேட்டு வைத்துக் காட்டி யிருக்கிறார்.

அத்தனைக்கும் முத்தாய்ப்பாக தனது பிரச்சார வாகனத்தில் தனது படத்துக்குப் பின்னணியில் அண்ணாவையும், எம்ஜிஆர் படத்தையும் பொறித்துக் கொண்டார். ஆக பெரியார், எம்ஜிஆர், அண்ணா என யாரையும் விஜய் விட்டுவைக்கவில்லை.

உங்களுக்கு அண்ணா, எம்ஜிஆர் பிடிக்கும் ஆனால் அதிமுக மேல் அதிருப்தியா என்னிடம் வாருங்கள், உங்களுக்கு பெரியார், அண்ணா பிடிக்கும் திமுக மேல் அதிருப்தியா என்னிடம் வாருங்கள் என்று விசாலமான கதவைத் திறந்து வைத்தார்.

மூன்றாவதாக தமிழ் தேசியம் என்று சீமான் பேசிக் கொண்டிருக்க திராவிடமும் தமிழ் தேசியமும் ஒன்று தான் என்று நாதக அதிருப்தியாளர்களையும் தன் பக்கம் வரவு வைத்துக் கொண்டார்.

கூடவே, "நான் எந்த மத நம்பிக்கைக்கும் எதிரானவன் இல்லை" என்று கூறி பல்வேறு தரப்பு வாக்குகளையும் தன் பக்கம் மடைமாற்றும் வேலையையும் பக்குவமாக செய்து வந்திருக்கிறார் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும் என அரசிய விமர்சகர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆனால், இன்னொரு தரப்பினர் இதையெல்லாம் திட்டவட்டமாக மறுக்கின்றனர். விஜய்யின் வெற்றி முழுக்க முழுக்க திரை பிம்ப வழிபாட்டின் வெளிப்பாடு என்று அடித்துக் கூறுகின்றனர். விஜய் ஒரு 'கல்ட் பாலிடிக்ஸை' உருவாக்கி தமிழகத்தை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்லப் போகிறார் என்று ஆவேச ஆருடம் கூறுகின்றனர்.

இன்னொரு தரப்பினர், "இது மக்கள் தீர்ப்பு. அதை ஏற்கத் தான் வேண்டும். 5 ஆண்டுகால அரசு சலுகைகளுக்குப் பிறகும். கல்வி வளர்ச்சி, மகளிர் மேம்பாடு என பல்வேறு திட்டங்களுக்குப் பிறகும், அதே மாதிரியான திட்டங்கள் எங்கள் ஆட்சி அமைந்தால் நிச்சயம் தருவோம் என்று ஏற்கெனவே பலமுறை ஆட்சியில் இருந்த அதிமுக சொல்லியும், இளைஞர்கள் மட்டுமல்லாது பெண்கள், வயதானவர்கள், பாரம்பரியமாக திமுக, அதிமுகவுக்கு வாக்களித்தவர்கள் எனப் பலரும் தவெகவுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றால் மக்கள் ஏதோ ஒரு மாற்றம் வேண்டுமென விரும்பி யிருக்கிறார்கள் என்றே அர்த்தம்.

மாற்றத்தை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அரசியல் வரலாற்றில் கட்சி ஆரம்பித்த மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி அமைத்தோர் பட்டியலில் தவெக தனக்கும் ஓரிடத்தைப் பெற்றுக் கொண்ட நிலையில், இனி அதன் வாயிலாக மக்களுக்கான ஆட்சியாக நடைபெறுகிறதா என்பதை கண்காணிப்பதும், அவ்வாறு நடக்காத போது இடித்துரைப்பதே மாற்றத்தை தேர்ந்தெடுத்த மக்கள் சக்தியின் வேலையாக இருக்க வேண்டும்" எனக் கூறுகின்றனர்.

"இந்தத் தேர்தல் முடிவுகளின் வெளிப்பாடு மக்கள் வாரிசு அரசியலையும், டெல்லியில் இருந்து இயக்கி நடக்ககூடிய 'ப்ராக்ஸி அரசியலை'யும் வெறுக்கின்றனர் என்பது உறுதியாகியிருக்கிறது. கூடவே, தமிழக தேர்தல் வரலாற்றின் மிகப் பெரிய கரும்புள்ளியாக இருந்த ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் பழக்கத்துக்கு பலத்த அடி தவெகவால் வழங்கப்பட்டிருக்கிறது" என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் சுட்டிக் காட்டுகிறார்.

இனி தவெக தலைமையிலான ஆட்சி தான் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்ட நிலையில், விஜய் அரசியல்மயமாக்கப் பட்டிருக்கிறாரா, அவரது தொண்டர்கள் அரசியல் மயமாக்கப்பட்டிருக்கிறாரா, தவெகவுக்கு கட்சி கட்டமைப்பு இருக்கிறதா என்பதெல்லாம் விவாதப் பொருளாகவே இருக்க முடியாது.

அதேபோல் இனியும் ஹீரோ ஒர்ஷிப்பை ஊக்குவிக்காமல், மாநில உரிமைகளை சமரசம் செய்துவிடாமல், சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்பவராக, அரசியல் முன்னோர் வகுத்த பாதைகளில் மக்கள் நலன் சார்ந்தவற்றை தழுவிக் கொண்டு விஜய் இருக்கட்டும் என்ற ஆதங்கக் குரல்களும் தமிழக அரசியல் களத்தில் ஒலிக்கின்றன.

## "வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி" விஜய்க்கு திரையுலக பிரபலங்கள் வாழ்த்து

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக 105+ தொகுதிகளை வசப்படுத்தி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இரண்டாம் இடத்தில் உள்ள திமுக கூட்டணிக்கு 74 தொகுதிகளும், மூன்றாம் இடத்தில் உள்ள அதிமுக கூட்டணிக்கு 53 தொகுதிகளும் மட்டுமே வசமாகின்றன

இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு திரையுலக பிரபலங்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ரஜினிகாந்த்: நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகத் தலைவர் திரு விஜய் அவர்களுக்கும், அவர் கட்சியினருக்கும் என்னுடைய வாழ்த்துகள்

கமல்ஹாசன்: தங்களுடைய முதல் தேர்தலிலேயே மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று பெருவெற்றி பெற்றிருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் திரு. விஜய் அவர்களுக்கும், அவரது கட்சியினருக்கும் என்னுடைய பாராட்டுகள். மக்கள் பணி சிறக்க என்னுடைய வாழ்த்துகள்

சூர்யா: மக்களின் அன்பும் ஆதரவும் கிடைப்பது வரம். நண்பர் விஜய் மீது தமிழ்நாடு பெரிய நம்பிக்கை வைத்திருக்கிறது. தமிழக அரசியலில் புதிய அத்தியாயத்தை தொடங்கவிருக்கும் அவருக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துகள்.

கார்த்தி: மனமார்ந்த வாழ்த்துகள், விஜய் சார். மக்கள் உங்கள் மீது கொண்டுள்ள அளப்பரிய அன்பும் நம்பிக்கையும் இணைந்து ஈட்டியுள்ள இந்த வெற்றி உண்மை யிலேயே வரலாற்றுச் சிறப்புமிக்கது. நமது மக்களுக்கான உங்கள் கனவுகளையும் தொலைநோக்குத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்குத் துணையாக இருக்கப் பிரார்த்திக்கிறேன்.

சிவகார்த்திகேயன்: போட்டி யிட்ட முதல் தேர்தலில் இவ்வளவு பெரிய தாக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இந்த வெற்றியை பெற்றிருக்கும் விஜய் சாருக்கு வாழ்த்துகள். நீங்கள் திரைத்துறையை சார்ந்தவர் என்பதில் கூடுதல் மகிழ்ச்சி, மக்கள் பணி சிறக்க வாழ்த்துகள்

ஏ.ஆர்.ரஹ்மான்: அன்புள்ள விஜய் அவர்களுக்கு, ஊழலற்ற அரசியல், சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை முன்னிறுத்தி, தமிழ்நாட்டை முன்னணிக்கு கொண்டு செல்லும் சிறந்த தலைவராகநீங்கள் உயர, வளர வாழ்த்துகள். பிளவுகளை மறுக்கும் அரசியல் பண்பாட்டுடன், தமிழையும் தமிழரையும்கொண்டாடும். சென்னை நகரத்தை கலை மற்றும் செழிப்பு நிறைந்ததாக மாற்றும் பயணமாக உங்கள் பணி சிறக்கட்டும்

மகேஷ்பாபு: புதிய மைல்கற்களைப் படைத்து, பிரமிக்கத்தக்க வெற்றியைப் பெற்றுள்ள நடிகர் விஜய்க்கு மனமார்ந்த வாழ்த்துகள்! இன்று கிடைத்துள்ள இந்த வெற்றி, மக்கள் உங்கள் மீது வைத்துள்ள அளப்பரிய நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. இந்த வெற்றி தமிழகத்திற்கு அர்த்தமுள்ள முன்னேற்றமாக மாறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நானி: முதலில் சந்தேகிக்கப்பட்டு, பின் மகுடம் சூட்டப்பட்டிருக்கிறது. இது எங்கள் வீட்டில் (மாநிலத்தில்) நடந்தது, இப்போது எங்கள் அண்டை வீட்டிலும் நடக்கிறது. அடிமட்டத்திலிருந்து ஒருவர் வெற்றி பெறுவது என்பது எப்போதும் ஒரு முழுமையான சினிமா போன்றது (அல்லது ஒரு முழுமையான அரசியல் என்று சொல்லலாமா?) தங்கள் முடிவைத் தெளிவாகத் தெரிவித்துள்ள தமிழக மக்களுக்கு, இதன் மூலம் நல்ல பல நன்மைகள் தொடரும் என நம்புகிறேன்.

சிரஞ்சீவி: அன்புள்ள விஜய், உங்களது முதல் தேர்தலில் கிடைத்துள்ள இந்த சிறப்பான மற்றும் தகுதியான வெற்றிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். தளராத ஆர்வத்தோடும் நோக்கத்தோடும் நீங்கள் தொடர்ந்து மக்களை ஊக்கப்படுத்தவும், வழிநடத்தவும், சேவை செய்யவும் வேண்டுகிறேன். தமிழகத்திற்கும் அதன் மக்களுக்கும் நீங்கள் ஆற்றவிருக்கும் பொதுப்பணிக்கு எனது மேலான வாழ்த்துகள்.

தனுஷ்: களத்துக்கு வந்து போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே தமிழ்நாட்டு மக்களின் பெரும் ஆதரவையும் அன்பையும் பெற்று ஆட்சியமைக்கவிருக்கும் திரு. விஜய் சார் அவர்களுக்கும் தமிழக வெற்றிக் கழகத்துக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்

# ரீல்ஸ் எடுக்க தண்ணீர் தொட்டி மீது ஏறிய உ.பி. இளைஞர்களில் ஒருவர் உயிரிழப்பு

## விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் 2 பேர் மீட்பு



லக்னோ:மே.5-
உத்தர பிரதேசத்தில் ரீல்ஸ் எடுப்பதற்காக மேல்நிலை தண்ணீர் தொட்டி மீது ஏறி, இறங்க முடியாமல் தவித்த இளைஞர்கள் விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர். உத்தர பிரதேச மாநிலம் சித்தார்த் நகர் மாவட்டத்தில் உள்ள ஒரு பழைய மேல்நிலை தண்ணீர் தொட்டியின் மீது நேற்று முன்தினம் மதியம் 1 மணியளவில் 5 இளைஞர்கள் ஏறி உள்ளனர். சமூக வலைதளத்திற்காக 'ரீல்ஸ்' எடுக்க அந்தத் தண்ணீர் தொட்டியின் மீது ஏறியுள்ளனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக தொட்டியின் ஏணி உடைந்ததில் 3 பேர் கீழே விழுந்தனர். இதில் ஒருவர் உயிரிழந்தார், காயமடைந்த இருவர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்ற 2 பேர் தொட்டியின் உச்சியில் சிக்கிக் கொண்டனர்.இது குறித்து தகவல் அறிந்து மாவட்ட ஆட்சியர், கூடுதல் மாவட்ட ஆட்சியர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் பிற உயர்மட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்றனர். மின்சாரத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனாலும் சுமார் 16 மணி நேரம் போராடியும் அவர்களை மீட்க முடியவில்லை. இதையடுத்து மாநில அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று, விமானப்படைக்கு சொந்தமான ஐஏஎப் விவி 17 V5 ஹெலிகாப்டர் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. அதிகாலை 5:20 மணியளவில் கான்ஷிராம் அவாசி காலனியை அடைந்த ஹெலிகாப்டர், வெறும் 15 நிமிடங்களில் அந்த இளைஞர்களை மீட்டது. பின்னர் அவர்கள் கோரக்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# ஈரான் ட்ரோன்களை அழிக்க அமீரகத்துக்கு 'அயர்ன் பீம்' ஆயுதங்களை அனுப்பியது இஸ்ரேல்



டெல் அவிவ்:மே.5-
ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது, ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் பிற இடங்களை குறிவைத்து ஈரான் 500 ஏவுகணைகள், 2,000 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இவற்றில் பெரும்பாலானவை நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்டன. சில ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் அமீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்தின.ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இஸ்ரேல் ஏற்கெனவே அயர்ன் டோம் என்ற வான் பாதுகாப்பு ஆயுதங்களையும், அவற்றை செயல்படுத்த ராணுவத்தினரையும் இஸ்ரேல் அனுப்பியுள்ளது. இந்நிலையில் ஈரானின் ட்ரோன் தாக்குதலை சமாளிக்க இஸ்ரேல் புதிதாக உருவாக்கிய 'அயர்ன் பீம்' என்ற ஆயுதத்தை அமீரகத்துக்கு அனுப்பியுள்ளது. இதில் உள்ள லேசர் கற்றைகள், ஈரான் ட்ரோன்களை நடுவானிலேயே சாம்பலாக்கிவிடும்.இது தவிர 'ஸ்பெக்ட் ரா' என்ற கண்காணிப்பு கருவியையும் அமீரகத்துக்கு இஸ்ரேல் வழங்கியுள்ளது. இது ஈரானின் ட்ரோன்கள் 20 கி.மீ தூரத்துக்கு அப்பால் வரும்போதே எச்சரிக்கை விடுக்கும். இதன் மூலம் அயர்ன் பீம் ஆயுதங்களை பயன்படுத்தி ட்ரோன்களை அழித்துவிடலாம்.

# நாடு முழுவதும் நேற்று நடந்த இளநிலை 'நீட்' தேர்வு வினாத்தாள் கசிந்ததா?

## போலி செய்தி பரப்பிய 120 சமூக வலைதளப் பக்கங்கள் முடக்கம்




புதுடெல்லி:மே.5-
தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வான நீட் தேர்வு நேற்று நாடு முழுவதும் 5,432 மையங்களில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர். இளநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வு நேற்று நாடு முழுவதும் 551 நகரங்களில் 5,432 தேர்வு மையங்களில் நடந்தது. சுமார் 22.79 லட்சம் முதல் 26 லட்சம் வரையிலான மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். தேர்வைச் சீராக நடத்த 2 லட்சம் பணியாளர்கள், 6,000 பார்வையாளர்கள் மற்றும் 674 நகர ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படுருந்தனர். தேர்வு மையங்களில் பயோமெட்ரிக் முறையில் தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்ட இடங்களில், மாணவர்களின் அடையாளத்தை உறுதி செய்து அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தேர்வில் முறைகேடுகளைத் தடுப்பதற்காக, தேசிய மருத்துவ ஆணையம் கடந்த 2ம் தேதி மற்றும் 3ம் தேதிகளில் மருத்துவ ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் விடுப்பு எடுக்கத் தடை விதித்திருந்தது. மேலும், சமூக வலைதளங்களில் போலி வினாத்தாள்களைப் பரப்பி மோசடி செய்ய முயன்ற 120க்கும் மேற்பட்ட டெலிகிராம் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களை ஒன்றிய அரசு அடையாளம் கண்டு முடக்கியது. இது தொடர்பாக சுமார் 1,500 புகார்கள் பெறப்பட்ட நிலையில், முறைகேடுகளைத் தடுக்க 2024ம் ஆண்டு பொதுத் தேர்வுகள் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தில் இது தொடர்பாக முறையான புகாரும் அளிக்கப்பட்டு தற்போது தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய நிலையில் வினாத்தாள் கசிவு குறித்த எந்த ஒரு அதிகாரப்பூர்வ தகவலும் உறுதி செய்யப்படவில்லை. தேர்வு முடிந்துள்ள நிலையில், தற்காலிக விடைக் குறிப்புகள் இன்னும் ஓரிரு வாரங்களில் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும். தொடர்ந்து ஜூன் மாதம் இறுதிக்குள் தேர்வு முடிவுகளை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து தேசிய தேர்வு முகமை அதிகாரிகள் 'நாடு முழுவதும் நீட் தேர்வுகள் சுமூகமாக நடந்து முடிந்துள்ளன; மாணவர்கள் அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும்' என்று கூறியுள்ளனர்.

70 வயதில் நீட் தேர்வு எழுதிய முதியவர்

தேசிய மருத்துவ ஆணையம் (என்.எம்.சி) நீட் நுழைவுத்தேர்வை எழுத நிர்ணயிக்கப்பட்டிருந்த அதிகபட்ச வயது வரம்பை ஏற்கனவே ரத்து செய்துவிட்டது. இதற்கு முன்பு பொதுப் பிரிவினருக்கு 25 வயது என்றும், இடஒதுக்கீடு பிரிவினருக்கு 30 வயது என்றும் இருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டு, தகுதியுள்ள யார் வேண்டுமானாலும் இத்தேர்வை எழுதலாம் என அறிவிக்கப்பட்டது. இந்த மாற்றத்தைத் தொடர்ந்து, உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் நேற்று நடைபெற்ற இளநிலை மருத்துவப் படிப்பிற்கான நீட் நுழைவுத்தேர்வில், அசோக் பகார் என்ற முதியவர் தனது 70 வயதில் பங்கேற்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். மறைந்த தனது தாயின் நீண்டகால ஆசையை நிறைவேற்றவும், சமூகத்திற்குச் சட்டப்பூர்வமாக மருத்துவச் சேவை செய்யவும் இந்த முதிர்ந்த வயதில் அவர் தேர்வெழுதியுள்ளார். மற்ற தேர்வர்களைப் போலவே அசோக் பகார் தீவிர சோதனைகளுக்குப் பிறகே தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்பட்டார். இவரது மனைவி ஒரு மகப்பேறு மருத்துவர் என்பதுடன், குடும்பத்தினர் அளித்த ஊக்கத்தினால் அவர் இந்த முயற்சியை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரள தேர்தல் முடிவுகள் 2026 காங்கிரஸ் கூட்டணி முன்னிலை!



திருவனந்தபுரம்:மே.5-
கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 70 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. அதேநேரத்தில், மார்க்சிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணியும் கடும் போட்டியை அளித்து வருகிறது.

காலை 9.30 மணி நிலவரப்படி, ஐக்கிய ஜனநாயக முன்னணி 70 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இடது ஜனநாயக முன்னணி 65 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. அதேநேரத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணி 2 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது.கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. மாநிலத்தில் மொத்தம் 140 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. ஆளும் இடது ஜனநாயக முன்னணியில் மார்க்சிஸ்ட் 86 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளன.

ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக 115 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் 43 மையங்களில் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன. காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணும் பணியில் 15,465 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# செல்போன் பயன்படுத்துவதை தடுக்க மகளுக்கு பவுன்சர் நியமித்த தந்தை



அகமதாபாத்:மே.5-
குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி 24 மணி நேரமும் ஸ்மார்ட்போனில் புகைப்படங்கள் எடுப்பது, அதை சமூகவலைதளங்களில் பதிவேற்றுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தார்.இதை அவரது தந்தை கண்டித்தபோது அவர் கேட்கவில்லை. ஸ்மார்ட் போனுக்கும், சமூக வலைதளங்களுக்கும் அவர் அடிமையாகிவிட்டார். இந்நிலையில் அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் பவுன்சர்களை அந்த தந்தை நியமித்துள்ளார். இது குறித்து அகமதாபாத் நகரைச் சேர்ந்த மனநல மருத்துவர் டாக்டர் முருகேஷ் வைஷ்ணவ் கூறும்போது, "அந்த சிறுமி புகைப்படங்களை பகிரும் வலைதளத்துக்கு அடிமையாகிவிட்டார். ஆன்லைனில் அறிமுகம் இல்லாத நபர்களுடன் பேசி வந்தார். இதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் 4 பவுன்சர்களை அந்தத் தந்தை நியமித்திருந்தார். ஆனாலும், அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து அவர் என்னிடம் அழைத்து வரப்பட்டார். அவருக்கு மருந்து, மாத்திரைகளைத் தந்து ஆலோசனையும் வழங்கப்பட்டது. இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன" என்றார். இதுகுறித்து ஃபோர்ஸ்11 செக்யூரிட்டி நிறுவனத் தலைவர் நிகில் பாண்டே கூறும்போது, "செல்லப்பிராணியான நாயை தனது 17 வயது மகன் அடித்து உதைக்கிறான் என்ற புகாரின் பேரில் அதைத் தடுக்க 8 பவுன்சர்களை நியமிக்குமாறு சிறுவனின் தந்தை கேட்டுக் கொண்டார். சுமார் 9 மாதங்களாக 2 ஷிப்டுகளில் 8 பவுன்சர்கள் அந்தப் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர்" என்றார்.

அதேபோல தங்களது குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதை நோக்கிலும் பவுன்சர்களைக் கேட்டுப் பெற்றோர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று அகமதாபாத்தில் செக்யூரிட்டி ஏஜென்சியை நடத்தி வரும் யாசின் மாலிக் தெரிவித்துள்ளார்.



# பொறியியல் படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

## தொழில்நுட்பக் கல்வித் துறை அறிவிப்பு

சென்னை:மே.5-
பொறியியல் கல்லூரிகளில் பிஇ, பிடெக் இடங்களில் சேருவதற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என தொழில்நுட்பக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் 440க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இங்கு வழங்கப்படும் பிஇ, பிடெக் படிப்புகளில் உள்ள சுமார் 1.70 லட்சம் இடங்கள் பொதுக் கலந்தாய்வு மூலம் ஒற்றைச் சாளர முறையில் நிரப்பப் படுகின்றன.

மாணவர் சேர்க்கைப்பணிகளை தமிழக அரசு சார்பில் மாநில தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மேற்கொள்கிறது. இந்நிலையில், வரும் 202627ம் கல்வி ஆண்டில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பு நேற்று வெளியாகியுள்ளது.

இதுகுறித்து தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் எஸ்.விசாகன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழகத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக் கழக வளாக பொறியியல் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் பிஇ, பிடெக் இடங்களில் சேருவதற்கான கலந்தாய்வில் பங்கேற்க ஆன்லைன் விண்ணப்ப பதிவு மே 3 (நேற்று) முதல் ஜூன் 2ம் தேதி வரை நடைபெறும். www.tneaonline.org என்ற இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப நடைமுறை, கால அட்டவணை, சான்றிதழ்கள் பதிவேற்றும் முறை (ஒலி ஒளி வாயிலாக), கடந்த 5 ஆண்டுகளில் கல்லூரி பாடப்பிரிவு மற்றும் வகுப்பு வாரியாக கட்ஆஃப் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள், பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள், சிறப்பு ஒதுக்கீட்டில் சேருவதற்கான சான்றிதழ் மாதிரிகள் உள்ளிட்ட தகவல்களும் இணையதளத்தில் உள்ளன.

விண்ணப்ப பதிவு கட்டணம் ரூ.500. எஸ்சி, எஸ்சிஅருந்ததியர், எஸ்டி பிரிவினருக்கு ரூ.250. இணையதள வசதி இல்லாதவர்கள் பயன்பெறும் வகையில் தமிழகம் முழுவதும் 110 பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் முகவரி, தொடர்பு எண்கள் இணையதளத்தில் தரப்பட்டுள்ளன.

பொறியியல் படிப்புக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் சந்தேகங்கள், கேள்விகளுக்கு விளக்கம் அளிக்க தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் சிறப்பு அழைப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. 18004250110 என்ற எண்ணில் இந்த மையத்தை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அசாமில் ஹாட்ரிக் ஆட்சியை தக்க வைக்கிறது பாஜக கூட்டணி!



குவஹாட்டி:மே.5-
அசாம் சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 126 சட்டப்பேரவைத் தொகுதிகளில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 92 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் 25 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

அசாம் சட்டப்பேரவையின் மொத்தமுள்ள 126 தொகுதிகளுக்கு கடந்த 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில், 85.96% வாக்குகள் பதிவாகின. வாக்குகளை எண்ணும் பணி இன்று காலை 8 மணி முதல் நடைபெற்று வருகிறது. காலை 10.30 மணி நிலவரப்படி பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 92 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. 64 தொகுதிகளில் வெற்றி பெறக்கூடிய கட்சி ஆட்சியை பிடிக்கும் எனும் நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மைக்கும் அதிக தொகுதிகளில் முன்னிலை வகித்து வருவதால் அக்கூட்டணி ஆட்சியை தக்கவைக்க உள்ளது.கடந்த 2016ம் ஆண்டு பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று மாநிலத்தில் முதல்முறையாக ஆட்சி அமைத்தது. முதல்வராக சர்பானந்த சோனாவால் பொறுப்பேற்றார். இதையடுத்து, அக்கட்சியின் ஹிமந்த பிஸ்வா சர்மா முதல்வராக பொறுப்பேற்றார். தற்போதைய தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியை கைப்பற்றும் நிலையில், ஹிமந்த பிஸ்வா சர்மா மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது


# சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும்: எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தல்



புதுடெல்லி:மே.5-
ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால் சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தி உள்ளன. கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தின. இதையடுத்து, ஈரானும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது பதில் தாக்குதல் நடத்தியது. ஒரு மாதத்துக்கு மேல் போர் நீடித்தது.இதன் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியதால், கச்சா எண்ணெய் சரக்குக் கப்பல்போக்குவரத்து முடங்கியது. இதனால், உலகம் முழுவதும் பெட்ரோல், டீசல், எரிவாயு விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. ஆனால் இந்தியாவில் எரிபொருள் விலை இதுவரை உயர்த்தப்படவில்லை. வர்த்தக எரிவாயு சிலிண்டர் விலை மட்டுமே உயர்த்தப்பட்டு வருகிறது.

இதனிடையே, தற்காலிக போர் நிறுத்தத்தை அமெரிக்கா அறிவித்தது. எனினும், ஈரான் மீதான கடற்படை முற்றுகை தொடரும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். இதையடுத்து, வியாழக்கிழமையன்று கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 126 டாலருக்கு மேல் உயர்ந்தது, பின்னர் சற்று குறைந்தது. இது ஹார்முஸ் ஜலசந்தியில் நீடித்த இடையூறு குறித்த கவலைகளை அதிகரித்தது.இந்த விலை உயர்வு, அரசுக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்களின் இழப்புகளை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது, குறிப்பாக, பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு (எல்பிஜி) ஆகியவற்றின் விற்பனையில் அதிக நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எனவே, அவற்றின் விலையை உயர்த்த வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளன.பணவீக்கம் அதிகரிக்கும் ஆனாலும் மத்திய அரசு உடனடியாக விலையை உயர்த்துமா என்பது தெரியவில்லை. ஏனெனில், எரிபொருள் விலையை உயர்த்தினால் பணவீக்கம் கணிசமாக அதிகரிக்கும் என அரசு கருதுகிறது.

## நிதி ஆயோக் முழு நேர உறுப்பினர்களாக ஆர்.பாலசுப்பிரமணியம், ஜோரம் அனியா நியமனம்




புதுடெல்லி::மே.5-

நிதி ஆயோக் அமைப்பின் முழுநேர உறுப்பினர்களாக ஆர். பாலசுப்ரமணியம், ஜோரம் அனியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.நாட்டின் முதன்மை கொள்கை ஆலோசனை அமைப்பாக நிதி ஆயோக் விளங்குகிறது. இதன் தலைவராக பிரதமர் இருக்கிறார். இந்நிலையில், கடந்த ஏப்ரல் 24ம் தேதி நிதி ஆயோக்கில், அசோக்குமார் லஹிரியை துணைத் தலைவராகவும், ராஜீவ் கவுபா, கே. வி.ராஜு, கோபர்தன் தாஸ், அபய் கரந்திகர் மற்றும் எம். ஸ்ரீனிவாஸ் ஆகியோரை முழு நேர உறுப்பினர்களாகவும் பிரதமர் நியமித்திருந்தார்.

இந்நிலையில், கல்வியாளர்கள் ஜோரம் அனியா மற்றும் ஆர்.பாலசுப்பிரமணியம் ஆகியோரை நிதி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினர்களாக நியமிக்க பிரதமர் மோடி சனிக்கிழமை ஒப்புதல் அளித்தார். இதன்படி, முழுநேர உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.அருணாச்சல பிரதேசத்தின் பழங்குடியின சமூகமான நிஷி சமூகத்தில் இருந்து முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்மணி ஜோரம் அனியா. இலக்கியம், கலாச்சாரம் போன்றவற்றில் அனியா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.மற்றொரு புதிய உறுப்பினரான ஆர். பாலசுப்பிரமணியம், 'மிஷன் கர்மயோகி' திட்டத்தின் கீழ் உள்ள திறன் மேம்பாட்டு ஆணையத்தின் மனிதவள உறுப்பினராக உள்ளார். இவர் பல புத்தகங்களை எழுதியுள்ளார். குறிப்பாக, பிரதமரின் 50 ஆண்டுகால பொதுவாழ்வை மையமாகக் கொண்டு 'Power Within: The Leadership Legacy Of Narendra Modi' என்ற தலைப்பில் எழுதிய புத்தகம் 2024ல் வெளியானது.

## அமெரிக்கா போரை நிறுத்த 14 அம்ச அமைதித் திட்டத்தை வழங்கிவிட்டோம்: ஈரான் அறிவிப்பு

டெஹ்ரான்: :மே.5-

போரை நிறுத்துவதற்காக 14 அம்ச அமைதித் திட்டத்தை நாங்கள் அனுப்பிவிட்டோம். இந்த விவகாரத்தில் இனி அமெரிக்காதான் முடிவு செய்ய வேண்டும் என்று ஈரான் அறிவித்துள்ளது. அணுசக்தி விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தொடங்கிய போரில் தற்போது தற்காலிக சண்டை நிறுத்தம் அமலில் உள்ளது. யுரேனியம் செறிவூட்டல் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடப்பதில் இழுபறி நீடிப்பதால் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் சிக்கல் நிலவுகிறது. இதனிடையே நிரந்தர



போர் நிறுத்தத்துக்கு ஈரான் புதிய சமரச திட்டத்தை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவிடம் வழங்கியுள்ளது.ஆனால் இந்த சமரச திட்டத்தில் தனக்கு திருப்தி இல்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதனிடையே ஈரான் அளித்த சமரச திட்டம் தொடர்பாக புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதில் ஈரான் 14 அம்சங்களை தெரிவித்து இருக்கிறது. லெபனான் உள்பட அனைத்து முனைகளிலும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.ஈரானைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கடற்படை முற்றுகையை நீக்க வேண்டும். அமெரிக்க படைகளை திரும்ப பெற வேண்டும். ஹார்முஸ் ஜலசந்திக்கு ஒரு புதிய நிர்வாக அமைப்பை நிறுவ வேண்டும். ஈரான் மீதான தடைகளை நீக்க வேண்டும். முடக்கப்பட்ட ஈரான் நாட்டு சொத்துக்களை விடுவிக்க வேண்டும். ஈரானுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட 14 அம்சங்கள் அதில் இடம் பெற்று உள்ளன.

மேலும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க 30 நாள் காலக்கெடுவையும் ஈரான் வலியுறுத்தி உள்ளது. ஈரான் அளித்த சமரச திட்டத்தில் திருப்தி இல்லை என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அதை ஆய்வு செய்ய உள்ளதாக அறிவித்து உள்ளார்.ட்ரம்ப் பரிசீலனை: இதுதொடர்பாக ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது: ஈரான் தற்போது எங்களுக்கு அனுப்பியுள்ள சமரச திட்டத்தை நான் விரைவில் ஆய்வு செய்ய உள்ளேன். ஆனால், கடந்த 47 ஆண்டுகளில் மனிதகுலத்துக்கும் உலகுக்கும் எதிராக அவர்கள் செய்த செயல்களுக்கு இன்னும் போதுமான அளவு பெரிய விலையை அவர்கள் செலுத்தாத நிலையில், அத்திட்டம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும் என்று என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை. இவ்வாறு ட்ரம்ப் கூறி உள்ளார்.


இதனிடையே நேற்று ஈரான் நாட்டு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் காசெம் கரீபாபடி கூறியதாவது: போரை நிறுத்துவது தொடர்பான 14 அம்ச அமைதித் திட்டத்தை அமெரிக்காவுக்கு வழங்கிவிட்டோம். இப்போது முடிவு அமெரிக்காவின் கையில் உள்ளது. ஜனநாயகப் பாதையைத் தேர்ந்தெடுப்பதா அல்லது மோதல் போக்கை நீடிப்பதா என்பதை அமெரிக்காதான் முடிவு செய்யவேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்

## 'உலகில் மிகப்பெரிய விதை': திகைக்க வைக்கும் திருவோடு மரம்

நாகர்கோவில்:மே.5-

நாகர்கோவில் வடசேரி தழுவிய மகாதேவர் கோயில் வளாகத்தில் உள்ள திருவோடு மரம் காய்த்துள்ள நிலையில், அதை பக்தர்கள் ஆவலுடன் பார்த்து செல்கின்றனர். திருவோடு என்பது அட்சய பாத்திரம், கபாலம் போன்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. திருவோடு மரத்தின் முற்றிய காயை இரண்டாக வெட்டி காய வைத்தால் கிடைக்கும் இந்த திருவோட்டின் சிறப்பு நம்மை ஆச்சரியப்பட வைக்கும். திருவோடு என்பது சன்னியாசிகள் வைத்து கொள்வது. பொதுவாக இந்த மரங்களை வீட்டில் வளர்ப்பதில்லை. திருவோட்டையும் வீட்டில் வைத்து கொள்வதில்லை. கோயில்களில் சிவபெருமான் பிக்ஷாடனர் வடிவத்தில், கையில் இந்த திருவோடு ஏந்தி இருப்பதை காணலாம். இது சிவனடியார்களின் புனித பொருளாக உள்ளது. உலகிலேயே மிகப்பெரிய விதை இந்த திருவோடு காய்தான்.

திருவோடு மரத்தின் பூர்வீகம் தெற்கு மெக்ஸிகோ மற்றும் அமெரிக்கா ஆகும். இந்த மரத்தின் விதைதான் திருவோடு செய்ய பயன்படுகிறது. இந்த



மரத்தின் பூக்கள் நறுமணம் மிக்கவை. இதனை தேடி வவ்வால்கள் அதிகம் வருகின்றன. இவைதான் மகரந்த சேர்க்கைக்கு உதவுகின்றன. திருவோட்டுக்காய் பெரிய தேங்காய் சைசில் இருக்கும். முற்றிய காய் உதிர்ந்து விழும். அதனை இரண்டாக பிளந்து நன்கு காய வைத்து, திருவோடாக பயன்படுத்தப்படுகிறது.

திருவோடு மரம் 30 அடி உயரம் வரை வளரும். இதன் பட்டை மென்மையாகவும், இலைகள் அகலமாகவும் காணப்படும். திருவோட்டின் காய், பூசணிக்காய் போல் பெரிய அளவில் காணப்படும். இது மரத்தில் 7 மாதங்கள் வரையில் இருந்தால்தான் நன்கு முதிர்ந்து, ஓடு பகுதி நல்ல தடிமனாக வரும். இதனை கொண்டு அலங்கார பொருட்கள், அழகுப்பெட்டிகள், ஆபரணங்கள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. வெளிநாடுகளில் இதில் அழகான படங்கள் வரைந்து தட்டு, கப்புகள், இசைக்கருவிகள் செய்யவும் பயன்படுத்துகின்றனர். பிரேசிலில் உணவை பரிமாறும் பாத்திரங்களாக பயன்படுத்துகின்றனர். இந்த ஓட்டில் உணவு வைத்தால் விரைவில் கெடாது. உடலுக்கு வலுவையும் கொடுக்கும். அதனால்தான் நம் நாட்டில் துறவிகள் இதனை பயன்படுத்துகின்றனர் போலும்.

இந்த காய்கள் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. இதன் உலர்ந்த பழங்கள் மற்றும் ஓட்டின் உட்புறம் உள்ள ஏராளமான வேதிப்பொருட்கள் வயிற்று உபாதைகளுக்கும், நுரையீரல் மற்றும் சிறுநீர் தொற்றை போக்கவும் பயன்படுகின்றன. உடலை குளிர்ச்சி அடைய செய்யவும், வயிறு மற்றும் குடல் புண்களை போக்கவும் பயன்படும் சிறந்த மூலிகை காய் இது. திருவோடு மரம் சைவ மடங்களிலும், சில கோயில்களில் தல விருட்சமாகவும் உள்ளது. இந்த மரத்தை, நம்மூரில் சா குபடி செய்யலாம். நம்மூர் மலை மண்ணுக்கு அருமையாக வளர்கிறது. இது 30 அடி உயரம் வரை வளரும் தன்மை கொண்டது. மூலிகை மருத்துவ பயிர்களில், சிறந்த மர சாகுபடி என திவோடு மரத்தை கூறலாம்

## காங்கிரஸ் பிரமுகரை வீடு புகுந்து தாக்கிய நாம் தமிழர் கட்சியினர்: தம்பதி உள்பட 4 பேர் படுகாயம்



தக்கலை:மே.05-

காங்கிரஸ் பிரமுகரை வீடு புகுந்து நாம் தமிழர் கட்சினர் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் தம்பதி உள்பட 4 பேர் படுகாயம் அடைந்தனர். குமரி மாவட்டம் தக்கலை அருகே கோழிப்போர்விளையை சேர்ந்தவர் நெல்சன் (55). இவர் முளகுமூடு பேரூர் காங்கிரஸ் கமிட்டி தலைவராக உள்ளார். இவரது மகன் ஆல்டிரின் பால் நெல்சன் (24). சென்னையில் வக்கீலாக உள்ள இவர் சமூக வலைத்தளங்களில் பதிவுகள் போடுவது வழக்கம்.Long Distance Bus & Railஇந்நிலையில் இவரது வீட்டுக்கு நாம் தமிழர் கட்சியை சேர்ந்த பாடி பில்டர் ராஜா பேரோன், பெண் உட்பட 4 பேர் நேற்று காலை வந்தனர். சமூக வலைத்தள பதிவுகள் குறித்து விளக்கம் கேட்க வேண்டும் என நெல்சனிடம் கூறியுள்ளனர். அப்போது அங்கு வந்த ஆல்டிரின் பால் நெல்சனை பார்த்ததும் இவன் தான் பதிவுகள் போடுபவன் அவனை வெட்டுங்கள் என கூறியுள்ளனர். இதையடுத்து அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளால் அவரது கையில் வெட்டினர். இதனை பார்த்து தடுக்க வந்த அவரது அண்ணன் ஆசீக் பால் நெல்சனை(27) தாக்கியதுடன் தடுக்க வந்த நெல்சன், அவரது மனைவி கலா (51), தாயார் சரோஜா (75), ஆகியோரையும் மிதித்து தாக்கியுள்ளனர். மேலும் வீட்டில் உள்ள பொருட்களையும் சூறையாடினர். இதனால் வீட்டில் அலறல் சத்தம் கேட்கவே ஊர்மக்கள் திரண்டனர். இதனை பார்த்த கும்பல் ஓட முயன்றது. ஆனால் பொதுமக்கள் சுற்றிவளைத்தனர். இதையடுத்து காயமடைந்தவர்களை மீட்டு, தக்கலை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். தகவலறிந்து அங்கு வந்த தாரகை கத்பர்ட் எம்எல்ஏ, காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் உரிய சிகிச்சை வழங்க மருத்துவர்களை அறிவுறுத்தினார். மேலும் சம்பவம் குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்க போலீசாரையும் அறிவுறுத்தினார். சம்பவ இடத்துக்கு போலீசார் வந்து ராஜா பேரோனை பிடித்து விசாரித்து வருகின்றனர்




## "இது வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி" விஜய் குறித்து எஸ்.ஏ.சந்திரசேகர் நெகிழ்ச்சி

சென்னை:மே.05-

"ஒரு அப்பாவாக மிகவும் சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கிறது. இதைவிட என்ன வேண்டும்?" என விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலவரப்படி தவெக 105 க்கும் மேற்பட்ட இடங்களை வசப்படுத்தும் வகையில் முன்னிலை வகித்து வருகிறது.

இது குறித்து விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் பேசும்போது, " விஜய், தான் முதல்வர் ஆக வேண்டும் என இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். அதற்கான களப்பணிகளையும் ஆற்றினார். என்னை விட என் மனைவி மகிழ்ச்சியாக இருக்கிறார்.

விஜய் அசைக்க முடியாத நம்பிக்கையில் இருந்தார். வெற்றி நமதே என்ற மந்திரமே விஜய்யின் தாரக மந்திரமாக இருந்தது. விஜய்யை தங்களது குடும்பத்தில் ஒருவராக தமிழக மக்கள் பார்க்கின்றனர். ஒரு அப்பாவாக ரொம்ப சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

இதைவிட என்ன வேண்டும்? எவ்வளவோ எதிர்ப்புகளை, சோதனைகளை தாண்டி விஜய் வெற்றி பெற்றுள்ளார். இது சாதாரண வெற்றி இல்லை. யாருடனும் கூட்டணி வைக்காமல் தனியாக நின்று வெற்றி பெற்றதே பெரிய விசியம்" என்று அவர் கூறினார்.

## மின்னல் தாக்கி தென்னை மரத்தில் தீ

பாலக்காடு: மே.05-

கேரளாவில் பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோடு, எலவஞ்சேரி, நெம்மாரா, நெல்லியாம்பதி மற்றும் ஆலத்தூர் ஆகிய சுற்று வட்டாரப்பகுதிகளில் நேற்று முன்தினம் இடி, மின்னல் மற்றும் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. இதனால் அப்பகுதி விவசாயிகள், பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இந்நிலையில் நெல்லியாம்பதி செல்லும் மலைப்பாதையில் சூறாவளி காற்றுடன் மழைப்பெய்ததால் சாலையோரத்தில் இருந்த மரங்களின் கிளைகள் முறிந்து வேரோடும் சாய்ந்தன. இதனால், நெம்மாராநெல்லியாம்பதி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்நிலையில், எலவஞ்சேரி கிராமத்தில் தென்னந்தோப்பில் இடி, மின்னல் தாக்கியதில் ஒரு தென்னை மரத்தில் தீப்பற்றி எரிந்தது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

## ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு

தருமபுரி:மே.5-

ஒகேனக்கல் காவிரி யாற்றில் நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக உயர்ந்துள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து கடந்த 3 நாட்களாக விநாடிக்கு 1,200 கனஅடியாக இருந்தது.இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை



காரணமாக நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது. அதன்படி, நேற்றைய அளவீட்டின் போது நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக அதிகரித்துள்ளது.



## ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஊட்டி: மே.5-

மே தினம் மற்றும் தொடர் விடுமுறை காரணமாக ஊட்டியில் ஏராளமானோர் குவிந்தனர். ஞாயிற்றுக்கிழமையான நேற்று அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம் மற்றும் ரோஜா பூங்காவில் மக்கள் கூட்டம் அலைமோதியது.இதனால் பூங்காக்களில் நுழைவு சீட்டு வாங்க சுற்றுலா பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், ஊட்டியில் அனைத்து ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் நிரம்பி வழிகின்றன.

அறைகளின் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்ட போதிலும், அனைத்து விடுதிகளும் முன்பதிவு செய்யப்பட்டு, இடம் கிடைக்காத நிலை ஏற்பட்டு உள்ளது.சமவெளிப் பகுதிகளில் இருந்து சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அதிகம் வருவதால், போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில் ஊட்டி நகரில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.கேரளம், கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநில சுற்றுலா வாகனங்கள், நீதிமன்ற உத்தரவுப்படி மசினகுடி கல்லட்டி வழியாக ஊட்டி செல்வதற்கு, மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளதால், சுற்றுலா வாகனங்கள் கூடலூர் வழியாகச் செல்கின்றன.இதனால், கூடலூர் நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது. உள்ளூர் வாகனங்களை இயக்க நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருப்பதால் ஓட்டுநர்கள், பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## மேற்கு வங்கத்தின் பால்டா தொகுதியில் மே 21ல் மறுதேர்தல்



கொல்கத்தா:மே.5-

மேற்கு வங்க மாநிலம் பால்டா சட்டப்பேரவைத் தொகுதியில் நடைபெற்ற வாக்குப் பதிவின் போது, ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக பல்வேறு முறைகேடுகள் அரங்கேறியதைத் தொடர்ந்து, அங்குள்ள அனைத்து 285 வாக்குச் சாவடிகளிலும் மறுதேர்தல் நடத்த இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.அதன்படி, மே 21ம் தேதி மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறும்; மே 24ம் தேதி வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கு வங்கத்தில் இன்று 293 தொகுதிகளுக்கு மட்டும் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் கறுப்பு நிற டேப் ஒட்டி வாக்குகளைத் தடுத்தது முதல், வாக்காளர்களைக் கண்டறிய வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தியது வரை பல்வேறு முறைகேடுகள் குறித்த முக்கிய தகவல்களை தேர்தல் ஆணையம் அம்பலப்படுத்தியுள்ளது.பால்டா தொகுதியில் முறையான வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததோடு, வாக்குப்பதிவு இயந்திரங்களில் உள்ள குறிப்பிட்ட வேட்பாளர்களின் சின்னங்களுக்கு நேராக கறுப்பு நிற டேப் ஒட்டப்பட்டு, அந்தப் பொத்தான்களை அழுத்த முடியாதபடி முடக்கியதாக புகார்கள் எழுந்தது.மேலும், அதிர்ச்சியூட்டும் தகவலாக, வாக்குப்பதிவு இயந்திரத்தின் பொத்தான்களில் வாசனைத் திரவியம் மற்றும் மையைப் பூசி, வாக்களித்துவிட்டு வரும் வாக்காளர்களின் விரல்களில் ஏற்படும் வாசனை மற்றும் நிறத்தை வைத்து அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதைக் கண்டறியும் சட்ட விரோதச் செயல்களும் பல வாக்குச் சாவடிகளில் அரங்கேறியுள்ளன. இது வாக்களிப்பதன் ரகசியத் தன்மையை முற்றிலுமாகச் சிதைப்பதாக அமைந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.மேலும், தொகுதி முழுவதும் பரவலாக வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டதையும், உண்மையான வாக்காளர்கள் மிரட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டதையும் தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்துள்ளனர். தேர்தல் அலுவலர்களே வாக்காளர்களுக்கு வழிகாட்டுவது போல வாக்குப்பதிவு அறைக்குள் நுழைந்து முறைகேடுகளிலும் ஈடுபட்டது வீடியோ பதிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

வாக்குச் சாவடிகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்கள், வாக்குப்பதிவு மும்முரமாக நடைபெற்ற நேரங்களில் திட்டமிட்டபடி அணைத்து வைக்கப்பட்டிருந்தன. பல இடங்களில் வீடியோ பதிவுகள் மாயமாகியுள்ளன அல்லது தொடர்பில்லாத காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் முறைகேடுகளை மறைக்கத் திட்டமிட்டது உறுதியாகியுள்ளது.ஒரே நபர் பலமுறை வாக்குச் சாவடிக்குள் நுழைந்து கள்ள ஓட்டுகளைப் பதிவு செய்தது, ரகசியக் காப்பு விதிகளை மீறி ஒரே நேரத்தில் பல நபர்கள் வாக்குப்பதிவு இயந்திரத்தின் அருகே நின்றது போன்ற அடுக்கடுக்கான புகார்களைத் தொடர்ந்து, பால்டா தொகுதியின் ஒட்டுமொத்தத் தேர்தல் முடிவுகளும் நம்பகத் தன்மையை இழந்துவிட்டதாக ஆணையம் கருதுகிறது.

இதன் காரணமாகவே. மேற்கு வங்க மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியின் பரிந்துரையை ஏற்று, பால்டா தொகுதித் தேர்தலை ரத்து செய்து முழுமையான மறுதேர்தலை நடத்தும் முடிவுக்கு வந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

சக்கர வியூகம்

05.05.2026 செவ்வாய்கிழமை



# விருதுநகர் மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெறும் தவெக பிரதான கட்சி வேட்பாளர்கள் கலக்கம்!

விருதுநகர்:மே.5-

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் தவெக வேட்பாளர்கள் அதிக வாக்குகளைப் பெற்று வருவதால் பிரதான கட்சி வேட்பாளர்கள் கலக்கமடைந்துள்ளனர். அதோடு, பிரதான கட்சிகளின் முகவர்களும் வாடிய முகத்துடன் காணப்பட்டனர்.விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, ராஜபாளையம் ஆகிய 7 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் திமுக, அதிமுக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக தவெக வேட்பாளர்கள் 7 தொகுதியிலும் களமிறக்கப்பட்டனர்.

பிரதான கட்சிகளைப் போல வாக்காளர்களை கவனிக்க முடியாவிட்டாலும் தவெகவினர் தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்தனர்.இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையின்போது முதல் சுற்றிலும் அதைத்தொடர்ந்தும் தவெக வேட்பாளர்கள் முன்னிலையில் இருந்து வருகின்றனர். ராஜபாளையம் தொகுதியில் தவெக வேட்பாளர் ஜெகதீஸ்வரி தொடர்ந்து முன்னிலையிலும், விருதுநகர் தொகுதியில் தேமுதிக வேட்பாளருக்கு ஈடுகொடுக்கும் வகையில் தவெக வேட்பாளர் செல்வம் 2வது இடத்திலும், திருச்சுழி தொகுதியில் தவெக வேட்பாளர் சமயன் முதலிடத்தையும், அருப்புக்கோட்டை தொகுதியில் தவெக வேட்பாளர் கார்த்திக்குமார் 2வது இடத்திலும் இருந்து வருகின்றனர்.தொடர்ந்து திமுக, அதிமுக வேட்பாளர்களுக்கு சம ஈடு கொடுக்கும் வகையில் தவெக வேட்பாளர்கள் வாக்கு பெற்றுள்ளது பிரதான கட்சி வேட்பாளர்களை கலக்கமடையச் செய்துள்ளது. தவெக எதிர்பாராத வகையில் வாக்கு வாங்குவதைப் பார்த்த பிரதான கட்சி முகவர்களும் நேற்று வாடிய முகத்தோடு காணப்பட்டனர்

# ட்ரம்ப்பின் அறிவிப்பும் சர்வதேச சந்தையின் சந்தேகங்களும்

அமெரிக்கா:மே.5-

,சர்வதேச வர்த்தக விதிகளையும், ராஜதந்திர உறவுகளையும் அமெரிக்காவுக்கே முதலிடம் (America First) என்ற தனது தனிப்பட்ட கொள்கையின் மூலம் அதிபர் டொனால்டு ட்ரம்ப் அடியோடு மாற்றி எழுதி வருகிறார்.




2026ம் ஆண்டின் தொடக்கத்தில் அவர் விதித்த அதிரடி வர்த்தக வரிகளும், ஈரான் தொடர்பான போர் பதற்ற அறிவிப்புகளும் உலகப் பங்குச் சந்தைகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடும் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியுள்ளன.

இந்தச் சூழலில், அமெரிக்காவின் பிடியில் இருந்து நழுவி வரும் உலகத் தலைமைப் பொறுப்பை சீனா ஏற்க வேண்டும் என்ற ஸ்பெயினின் பகிரங்கக் கோரிக்கை, புதிய புவிசார் அரசியல் மாற்றத்திற்கும் வலுவான அறைகூவலுக்கும் வித்திட்டுள்ளது.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் சில கட்டுப்பாடுகளுக்குப் பிறகு, 2026 பிப்ரவரியில் இறக்குமதி பொருட்களுக்கு 10 % முதல் 15 % வரை ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி வரி விதித்தது. இந்த அறிவிப்பு மட்டுமின்றி ஈரான் போர் தொடர்பான பல்வேறு அறிவிப்புகள் பெரும்பாலும் வெள்ளிக்கிழமை சந்தை முடியும் நேரத்திலோ அல்லது வார இறுதி நாட்களிலோ வெளியாவது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இதுபோன்ற அறிவிப்புகள் ட்ரம்ப் நிர்வாகம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனக்கு நெருக்கமானவர்களுக்கு சாதகமாக செயல்படுகிறது எனற குற்றச்சாட்டு எழுந்துள்ளதுடன் சாதாரண முதலீட்டாளர்களின் நம்பிக்கையைச் சிதைப்பதாக உள்ளது என பொருளாதார வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சந்தை விடுமுறை நாட்களில் வெளியிடப்படும் இந்த அறிவிப்புகளின் தாக்கம் குறித்து முன்கூட்டியே தெரிந்த 'உள்வட்டாரங்கள்' (Insiders), திங்கட்கிழமை சந்தை மீண்டும் திறக்கும்போது பல மில்லியன் டாலர் லாபத்தை ஈட்டியதாக புகார் எழுந்துள்ளது.

உதாரணமாக, கடந்த பிப்ரவரி 23 திங்கட்கிழமை அன்று, அமெரிக்கப் பங்குச் சந்தைகளான எஸ்-பி 500 மற்றும் நாஸ்டாக் ஆகியவை கடும் சரிவைச் சந்தித்தன. இந்த வீழ்ச்சியை முன்கூட்டியே கணித்து 'ஷார்ட் செல்லிங்' செய்த ட்ரம்ப் ஆதரவு நிறுவனங்கள், சுமார் 80 மில்லியன் முதல் 120 மில்லியன் டாலர் வரை லாபம் பார்த்ததாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ரிச்சிடோரஸ் தாக்கல் செய்த அறிக்கை அதிர வைக்கிறது.

ஈரான் மீதான தாக்குதல் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி முற்றுகை தொடர்பான ட்ரம்ப்பின் அறிவிப்புகள் சர்வதேச எரிசக்தி சந்தையை நிலைகுலையச் செய்துள்ளன. ஏப்ரல் 7ம் தேதி ட்ரம்ப் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து, பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை ஒரே நாளில் 8.3% உயர்ந்தது. வியப்புக்குரிய வகையில், இந்த அறிவிப்புக்குச் சில நிமிடங்களுக்கு முன்பாகவே சுமார் 2.4 பில்லியன் டாலர் மதிப்பிலான எண்ணெய் ஒப்பந்தங்கள் வர்த்தகம் செய்யப்பட்டது சந்தேகத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இது குறித்து விசாரிக்க முற்பட்ட பங்குச் சந்தை ஒழுங்குமுறை அமைப்புகளை, நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தி ட்ரம்ப் முடக்குவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கிரிப்டோ கரன்சி மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மீதான பல முக்கியமான அமலாக்க நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன அல்லது கைவிடப்பட்டுள்ளன. இது பிடிக்காமலேயே நேர்மையான அதிகாரியாகக் கருதப்பட்ட எஸ்இசி அமலாக்கப் பிரிவு இயக்குநர் மார்கரெட் ஆர். ரையான் கடந்த மார்ச் 16ல் திடீரென ராஜிநாமா செய்ததாகவும் கூறப்படுகிறது.

செனட்டர் எலிசபெத் வாரன் மேக்சின் வாட்டர்ஸ் போன்ற முக்கியத் தலைவர்கள், இந்த ராஜிநாமா குறித்து விரிவான அறிக்கை கேட்டு எஸ்இசி தலைவர் பால் அட்கின்ஸுக்கு கடிதம் எழுதியுள்ளனர். இந்த விவகாரம் குறித்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடும் விவாதங்கள் நடந்து வருகின்றன.

நாட்டின் உச்ச அதிகார மையங்களுடன் தொடர்புடையவர்கள் ஈட்டும் ஒவ்வொரு பில்லியன் டாலர் லாபமும், கோடிக் கணக்கான சாமானிய மக்களின் உழைப்பிலிருந்து பிடுங்கப்படும் ஒரு மறைமுகமான வரியாகவே பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் இந்த கண்ணியமற்ற கணிக்க முடியாத போக்கினால் அதிருப்தியடைந்துள்ள பல ஐரோப்பிய நாடுகள், தற்போது ஆசியாவின் பக்கம் திரும்பத் தொடங்கியுள்ளன. சமீபத்தில் பெய்ஜிங்குக்குப் பயணம் மேற்கொண்ட ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், அமெரிக்கா விட்டுச் சென்ற தலைமைத்துவ வெற்றிடத்தை சீனா நிரப்ப வேண்டும் என்று பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தது சர்வதேச அரசியலில் ஒரு மைல் கல்லாகப் பார்க்கப்படுகிறது.

அதற்கு ஏதுவாக, நேட்டோ அமைப்பில் உள்ள ஒரு முக்கிய நாடான ஸ்பெயின், சீனாவுடன் 5 பில்லியன் டாலர் மதிப்பிலான புதிய பசுமை ஆற்றல் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இது அமெரிக்க டாலரின் வலிமையைக் குறைக்கும் ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவே வல்லுநர்களால் கருதப்படுகிறது.

2026ம் ஆண்டு என்பது உலக வல்லரசு வரிசையில் ஒரு பெரிய இடமாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக அமையும் என்பது சர்வதேச வல்லுநர்களின் கணிப்பாக உள்ளது. நிலையான, கணிக்கக் கூடிய ஒரு பொருளாதாரத் தலைமையை நோக்கிய உலக நாடுகளின் தேடல் அதிகரித்துள்ளது. அது சீனாவை உலக அரங்கில் முன்னிறுத்துவதாக அமையுமா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

# "எங்கள் கண் முன்னே மரணத்தை கண்டோம்" ம.பி. ஜபல்பூர் படகு விபத்தில் உயிர் தப்பியவர்கள் வாக்குமூலம்

ஜபல்பூர்:மே.5-

மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் உள்ள பார்கி அணையில் சுற்றுலாப் பயணிகள் சென்ற சொகுசுப் படகு விபத்துக்குள்ளானதில், பல குடும்பங்கள் தங்களின் உறவினர்களைப் பறிகொடுத்துப் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளன.



மகிழ்ச்சியாக தொடங்கிய அந்த சுற்றுலாப் பயணம், மரணப் போராட்டமாக மாறிய துயரமான தருணங்களை விபத்தில் உயிர் தப்பியவர்கள் கண்ணீருடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 11ஆக உயர்ந்துள்ளது. சனிக்கிழமை நடைபெற்ற மீட்புப் பணியின் போது மேலும் இரண்டு குழந்தைகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய வழக்கறிஞர் ரோஷன் ஆனந்த் வர்மா கூறுகையில், "படகு ராட்சத அலைகளில் சிக்கிக் கொண்டது. சுமார் அரை மணி நேரம் அங்கு மரண ஓலம் கேட்டது. நாற்காலிகள், மேஜைகள் மற்றும் மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். படகின் ஒரு பகுதி உடைந்து உள்ளே தண்ணீர் புகத் தொடங்கியது. எங்கள் கண் முன்னே மரணம் தெரிந்தது.உடனடியாகச் செயல்பட்டு, அங்கிருந்த 'லைஃப் ஜாக்கெட்'களை எடுத்து எங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் அணிவித்தோம். அவ்வாறு செய்யாவிட்டால் நாங்கள் யாரும் இன்று உயிரோடு இருந்திருக்க மாட்டோம். 11 வயது குழந்தையுடன் எப்படியோ கரையை நோக்கி நீந்தி உயிர் தப்பினோம். வானிலை முன்னெச்சரிக்கை இருந்தும் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு படகு இயக்கப்பட்டுள்ளது.

அவசர காலத்தில் ஊழியர்கள் முறையான வழிகாட்டுதல்களை வழங்கவில்லை. மீட்புப் படகுகள் உடனடியாக வந்திருந்தால் அத்தனை உயிர்களையும் காப்பாற்றியிருக்கலாம். இதற்குப் பொறுப்பேற்று சுற்றுலாத் துறை அமைச்சரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் " என்றார்.

# திருச்சியில் ஒரு கிலோ தங்கம் கொள்ளையடித்த வழக்கில் நகை பட்டறை ஊழியர் உட்பட 4 பேர் கைது


திருச்சி:மே.5-

திருச்சியில் நகைபட்டறையில் ஒரு கிலோ தங்கம் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில், நகை பட்டறை ஊழியர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.திருச்சி பெரியசெட்டி தெருவில் பழைய தங்க நகைகளை உருக்கி அதை கட்டியாக்கி விற்பனை செய்யும் நகை பட்டறை தொழில் நடத்தி வருபவர் உதய். இவரது வீட்டின் முதல் தளத்தில் கடை ஊழியர் நித்தின் என்பவர் தங்கி உள்ளார்.

இருவரும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இந்நிலையில், நகை பட்டறைக்கு ஏப்.25ம் தேதி வந்த 4 பேர், தங்கக்கட்டி வாங்குவதுபோல பேசி நித்தின், உதய் ஆகியோரை தாக்கி ரூ.1.49 கோடி மதிப்பிலான ஒரு கிலோ தங்கக்கட்டியை கொள்ளையடித்துச் சென்றனர். இதுதொடர்பாக, கோட்டை போலீஸார் 2 தனிப்படை அமைத்து குற்றவாளிகளை தேடினர். உதய், நித்தின் ஆகியோரது செல்போன்களை கைப்பற்றிய போலீஸார், இருவரும் யாரிடம் பேசினார்கள் என ஆய்வு செய்தனர்.இதில், கடை ஊழியர் நித்தினிடம் விசாரணை நடத்தியபோது, அவர் தனக்கு தெரிந்த மகாராஷ்டிராவைச் சேர்ந்த 3 பேரை வைத்து கொள்ளை சம்பவத்தை அரங்கேற்றியது தெரிய வந்தது.மேலும், சம்பவம் நடைபெற்ற அன்றே போலீஸார் மாநிலம் முழுவதும் சோதனைச் சாவடிகளை எச்சரித்தனர். ஓசூர் அருகே கொள்ளையர்கள் சென்ற காரை போலீஸார் மடக்கி பிடிக்க முயன்றபோது, காரில் இருந்த 3 பேர் தப்பியோடினர். கார் ஓட்டுநர் அமல்ஜாதவ் மட்டும் போலீஸாரிடம் சிக்கிக் கொண்டார்.நித்தின், அமல்ஜாவத் ஆகியோர் அளித்த தகவலின்பேரில், திருட்டு நகைகளை வாங்கி விற்கும் பியூஸ் ஆனந்த், பிரவீன் ஆகியோரையும் போலீஸார் பிடித்தனர்.

தொடர்ந்து, நித்தின், அமல்ஜாதவ், பியூஸ் ஆனந்த், பிரவீன் ஆகிய 4 பேரையும் போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். பின்னர், அவர்களை திருச்சி 3வது குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த கொள்ளை சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்டு தலைமறைவாக உள்ள 3 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.



# இலங்கையில் சைபர் மோசடி: வெளிநாட்டினர் 130 பேர் கைது

கொழும்பு:மே.5-

இலங்கையில் இணையம் வழி மோசடிச் செயல்கள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், கொழும்பின் புறநகர்ப் பகுதியான தலங்கமவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனையில், 37 சீன நாட்டவர்களைப் போலீசார் கைது செய்தனர்.அவர்கள் அனைவரும் 24 முதல் 44 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தனர் என காவல்துறை தெரிவித்துள்ளது. இதை தொடர்ந்து கொழும்பு புறநகர் பகுதி ராஜகிரியாவில் நேற்று நடத்தப்பட்ட சோதனையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்




# பெரம்பலூர் அருகே சூறைக்காற்றுடன் மழை: 100 ஏக்கர் மக்காச்சோள பயிர்கள் சேதம்

பெரம்பலூர்: மே.5-

கடும் சூறைக்காற்றுடன் மழை பெய்ததில் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டத்துக்கு உட்பட்ட மலையாளப்பட்டி கிராமத்தில் 100 ஏக்கர் மக்காச் சோளம் மற்றும் 20 ஏக்கர் வாழை மரங்கள் வயலில் சாய்ந்து சேதமடைந்துள்ளன.



பெரம்பலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சூறைக்காற்றுடன் பரவலாக மழை பெய்தது. இதனால், பல நாட்களாக கடுமையாக நிலவி வந்த வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேவேளையில், சில இடங்களில் வேளாண் பயிர்கள் சேதமடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.இந்நிலையில், வேப்பந்தட்டை வட்டம் மலையாளப்பட்டி கிராமத்தில் சூறைக்காற்றுடன் பெய்த மழையால் 100 ஏக்கர் மக்காச்சோள பயிர்கள், 20 ஏக்கர் வாழை மரங்கள் வயலில் சாய்ந்துவிட்டன. இதனால், பல லட்ச ரூபாய் இழப்பீடு ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் வி.நீலகண்டன் கூறியது: பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு, அவை அறுவடை காலத்தை நெருங்கி இருந்தன.இந்நிலையில், நேற்று முன்தினம் சூறைக்காற்றுடன் பெய்த பலத்த மழையில் 100 ஏக்கர் மக்காச்சோள பயிர்கள் வேருடன் வயலில் சாய்ந்துவிட்டன. இதுவரை ஏக்கருக்கு ரூ.43 ஆயிரம் வரை செலவழித்துள்ள நிலையில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதேபோல, 20 ஏக்கர் வாழை மரங்களும் சாய்ந்துவிட்டன. பயிர்கள் பாதிப்பு குறித்து அரசு கணக்கெடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர்: அரை இறுதியில் இந்திய அணி தோல்வி

ஹார்சென்ஸ்:மே.5-

டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதி சுற்றில் இந்திய ஆடவர் அணி நேற்று முன்தினம் இரவு பிரான்ஸ் அணியுடன் மோதியது.இதில் இந்திய அணி 03 என்ற கணக்கில் தோல்வி அடைந்து வெண்கலப் பதக்கம் பெற்று தொடரை நிறைவு செய்தது. இந்திய அணியில் காயம் காரணமாக லக் ஷயா சென் களமிறங்கவில்லை. அவருக்கு பதிலாக ஹெச்.எஸ்.பிரனாய் விளையாடினார். முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 1121, 921 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 4வது இடத்தில் உள்ள கிறிஸ்டோ போபோவிடம் தோல்வி அடைந்தார்.4வது முறையாக இதைத் தொடர்ந்து நடைபெற்ற அடுத்த ஆட்டத்தில் கிடாம்பி ஸ்ரீகாந்த் 16 21, 18 21 என்ற செட் கணக்கில் 10ம் நிலை வீரரான அலெக்ஸ் லானியரிடம் வீழ்ந்தார். இதன் பின்னர் 3வது ஆட்டத்தில் இந்தியாவின் ஹெச்.எஸ்.பிரனாய், தோமா ஜூனியர் போபோவுடன் மோதினார். இதில் ஹெச்.எஸ்.பிரனாய் 19 21, 1621 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.2022ம் ஆண்டு சாம்பியனான இந்திய அணி தாமஸ் கோப்பை தொடரில் வெண்கலப் பதக்கம் வெல்வது இது 4வது முறையாகும். கடந்த 1952, 1955 மற்றும் 1979ம் ஆண்டுகளிலும் இந்தியா வெண்கலப் பதக்கம் கைப்பற்றியிருந்தது.







SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000